# தமிழக மருத்துவ சமுதாயத்திற்கு MBC-ல் 5% உள் இட ஒதுக்கீடு கோரும் மனு

அனுப்புதல்

01. தமிழ்நாடு மருத்துவர் சமூக நலச் சங்கம்(326/2007).

02. முடிதிருத்தும் தொழிலாளர் நலச்சங்கம் (ம)
அனைத்து அமைப்புச் சாரா தொழிலாளர்கள் கட்டுமான
தொழிலாளர்கள் பொது நலச்சங்கம்(2692/CNI).

03. தமிழ்நாடு மருத்துவர் சவரத்தொழிலாளர் சங்கம் (124/1990).
தமிழ்நாடு முடிதிருத்தும் தொழிலாளர் மத்திய சங்கம் (CNI 3183)

04. தமிழ்நாடு சவரத்தொழிலாளர் சங்கம் (297/54).

05. வீரத்தியாகி விஸ்வநாததாஸ் தொழிலாளர் கட்சி.
பதிவு எண்.56/09/2019/PPS-1/563

06. அனைத்து மருத்துவ மக்கள் முன்னேற்ற கழகம்.

07. தமிழ்நாடு மருத்துவர் சமூக நல பாதுகாப்பு சங்கம்.
( முடிதிருத்துவோர் நாதஸ்வர தவில் இசை கலைஞர்கள்)

08. தமிழ்நாடு முடிதிருத்தும் அழகு கலை மற்றும்
அமைப்புச்சாரா தொழிலாளாகள் நலச்சங்கம்.
(பதிவு எண்.3430CNI)
தமிழ்நாடு மருத்துவ சமுதாய பேரவை.

09. மருத்துவர் கூட்டமைப்பு, சென்னை.

10. TEEM சங்கம், சென்னை, (பதிவு எண்.52/2018).

11. TEEM சங்கம், திருநெல்வேலி,(பதிவு எண்.111/2010).

12. TEEM சங்கம், மதுரை, (பதிவு எண்.139/2012)

13. TEEM மருத்துவர் திருவாரூர் கிளப், திருவாரூர்.

14. தியாகி SSV நல அறக்கட்டளை, விருத்தாசலம்,

15. மருத்துவர் பொது டிரஸ்ட், சிதம்பரம்.

16. நவசமாஜ் தமிழ்நாடு,நெ.42 மாறன் நகர், வண்டிகேட், சிதம்பரம்.
Email: navtncdm@gmail.com

பெறுதல்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,
தலைமை செயலகம்,
தமிழ்நாடு அரசு,
சென்னை-9.

| |
|---|
| மாண்புமிகு ஆணையர் அவர்கள்,<br>தமிழ்நாடு பிற்பட்டோர் மற்றும் மிகவும்<br>பிற்பட்டோர் ஆணையம்,<br>சென்னை. |

மாண்புமிகு ஐயா,

மருத்துவ இன மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்காக மத்திய மாநில அரசுகள் ஆர்வத்துடன் அமைத்த பிற்படுத்தப்பட்ட ஆணையங்கள் எந்தவிதத்திலும் எங்களுக்கு பயனுள்ளதாக இல்லை என்பதை இம்மனுவின் பின்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள **விரிவான அறிக்கை**யில் சுட்டிக்காட்ட விழைகிறோம். அத்தோடு எங்களுக்கு 5 சதவீதம் உள் ஒதுக்கீடு கொடுக்க வேண்டிய அவசியத்தையும் உங்களுக்கு உணர்த்த விரும்புகிறோம். அன்புகூர்ந்து மருத்துவ இன மக்களுக்கு 5% உள் இட ஒதுக்கீடு வழங்கி அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

பின்சேர்க்கை:
1. விரிவான அறிக்கை
2. இணைப்புகள் 1 முதல் 4
3. Case Study of Mannargudi (with reference 1 to 9)

சிதம்பரம்,
14.12.2020.

தங்கள் உண்மையுள்ள,
தமிழக மருத்துவ சமூக பல்வேறு அமைப்பு தலைவர்கள்.

01. தமிழ்நாடு மருத்துவர் சமூக
நலச் சங்கம்(326/2007).

02. முடிதிருத்தும் தொழிலாளர் நலச்சங்கம் (ம)
அனைத்து அமைப்புச் சாரா தொழிலாளர்கள்
கட்டுமான தொழிலாளர்கள் பொது
நலச்சங்கம்(2692/CNI).

03. தமிழ்நாடு மருத்துவர் சவரத்தொழிலாளர்
சங்கம் (124/1990).
தமிழ்நாடு முடிதிருத்தும் தொழிலாளர்
மத்திய சங்கம் (CNI 3183)

04. தமிழ்நாடு சவரத்தொழிலாளர் சங்கம் (297/54).

05. வீரத்தியாகி விஸ்வநாததாஸ் தொழிலாளர் கட்சி.
பதிவு எண்.56/09/2019/PPS-1/563

06. அனைத்து மருத்துவ மக்கள் முன்னேற்ற கழகம்.

07. தமிழ்நாடு மருத்துவர் சமூக நல பாதுகாப்பு
சங்கம்.( முடிதிருத்துவோர் நாதஸ்வர
தவில் இசை கலைஞர்கள்)

08. தமிழ்நாடு முடிதிருத்தும் அழகு கலை
மற்றும் அமைப்புச்சாரா தொழிலாளாகள்
நலச்சங்கம்.(பதிவு எண்.3430CNI)
தமிழ்நாடு மருத்துவ சமுதாய பேரவை.

09. மருத்துவர் கூட்டமைப்பு, சென்னை.

10. TEEM சங்கம், சென்னை,
(பதிவு எண்.52/2018).

11. TEEM சங்கம், திருநெல்வேலி,
(பதிவு எண்.111/2010).

12. TEEM சங்கம், மதுரை,
(பதிவு எண்.139/2012)

13. TEEM மருத்துவர் திருவாரூர் கிளப்,
திருவாரூர்.

14. தியாகி SSV நல அறக்கட்டளை,
விருத்தாசலம்,

15. மருத்துவர் பொது டிரஸ்ட்,
சிதம்பரம்.

16. நவசமாஜ் தமிழ்நாடு,
நெ.42 மாறன் நகர், வண்டிகேட்,
சிதம்பரம் 608001.
Email: navtncdm@gmail.com

# தமிழக மருத்துவ சமுதாயத்திற்கு MBC-ல் 5% உள் இட ஒதுக்கீடு கோரும் விரிவான அறிக்கை.

‘‘ஏற்றத்தாழ்வு இல்லாத மக்களிடம் சமத்துவத்தை காணலாம். ஏற்றத்தாழ்வு உள்ளவர்களிடம் சமத்துவத்தை ஏற்பட முயற்சிப்பது ஏற்றத்தாழ்வை நிரந்தரமாக்கும்’’.

---பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல்.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கை உயர்வடைய அவர்களுக்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டும். இல்லையேல், நமது அரசியலமைப்பு வலியுறுத்தும் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியவற்றை எல்லோரும் பெற முடியாது என்பதனை அரசு அமைத்த பிற்பட்ட வகுப்பு ஆணையங்கள் புரிந்துள்ளன. இந்த ஆணையங்கள் ஏழை எளிய மக்களை வகுத்து, அவர்கள் உயர்வு பெற வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு பெரும் பங்குகளை ஆற்றியுள்ளன. ஆணையங்கள் மக்கள் நலத் திட்டங்களை சரியான திசையில் செலுத்துவதற்கு உதவியுள்ளன. மண்டல் கூறுகிறார்: ‘‘சமூக இலக்கு என்ற சமத்துவத்தை அடைவதற்கு இட ஒதுக்கீடு என்பது ஒரு உரிமையாகும். மேலும் அது சரியான முறையான சட்ட அமைப்பு கருவியாகும் ‘‘ (Chapter IV P 313). ஆனால் நாங்கள் விரும்பிய எந்தப் பலனையும் அடையவில்லை.

நாங்கள் சுதந்திர போராட்டத்திலும் திராவிட இயக்கத்தின் மிகுந்த பங்களிப்பை வழங்கி இருந்தாலும், நாங்கள் பெற வேண்டிய இட ஒதுக்கீடு பலனை நாங்கள் பெறவில்லை. விஸ்வநாததாஸ், வேதாரணியம் வைரப்பன் தங்களுடைய உயிரை நாட்டுக்காக தியாகம் செய்தார்கள். ஆனால் எங்களுடைய தியாகமும் திராவிட அரசியல் வளர்ச்சிக்கு வழங்கிய முயற்சியும் வரலாற்றில் அழிக்கப்பட்டுவிட்டது அல்லது அலட்சியம் செய்யப்பட்டுவிட்டது. சித்த மருத்துவம் தடை செய்யப்பட்டது. நாங்கள் முடி வெட்டும் தொழிலுக்கு கீழே தள்ளப்பட்டோம். உயர்ந்த இன மக்களின் நலத்திற்காக, ஆங்கில ஆடைகளை இறக்குமதி செய்வதற்கு எதிர்ப்பாக செயல்பட்ட தேசிய சுதேசி இயக்கம், எங்கள் இன தொழிலான சித்த மருத்துவத்தை பாதுகாக்க தவறிவிட்டது. வீட்டில் நூற் பை வளர்த்தவர்கள் எங்களது முன்னோர்களின் தொழிலான சித்த மருத்துவத்தை புறக்கணித்தனர். இது போலவே இசை, அரசியல், சரித்திரம் படைத்த ஆப்ரகாம் பண்டிதர், வீரத்திற்கு பெயர்போன கருப்பர்சேர்வை, சித்த

மருத்துவத்திற்கு பெயர் சேர்த்த S.S. ஆனந்தம் இவர்கள் எல்லோரும் சாதி என்ற தீயினால் எரிக்கப்பட்டனர்.

1921 நீதிக்கட்சி கொண்டு வந்த முதல் வகுப்புவாரி ஒதுக்கீடு பிராமணர், பிராமணர் அல்லாதவர்கள் இடையே உள்ள போராட்டத்தை படம் பிடித்துக் காட்டுகிறது. இந்த இட ஒதுக்கீட்டில் நில உரிமையாளர்களான வெள்ளாளர், முதலியார் போன்றவர்கள்தான் பயன்பெற்றனர். அவர்கள் இட ஒதுக்கீட்டினால் கிடைத்த எல்லாப் பலன்களையும் தங்களதாக மாற்றிக் கொண்டனர். ( மண்டல் கமிஷன் Vol. I p 46)

இட ஒதுக்கீட்டு பலன் முறையாக கிடைக்காததனால், பிராமின் அல்லாதவர்கள், உயர்ந்த பிராமின் அல்லாதவர்கள், பிற்படுத்தப்பட்ட பிராமின் அல்லாதவர்கள் என்று வேறு பட்டனர். இந்த குழப்பத்திற்கு ஒரு முடிவு காண ஆங்கிலேயே அரசாங்கம் ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்தது. 1931-ல் மக்கள் கணக்கெடுப்பு ஆணையர் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் இருந்து தாழ்த்தப்பட்ட வகுப்புகளை பிரிப்பதற்கு கீழ்காணும் காரணிகளை வழங்கினார். (Reservation in Tamil Nadu P 292)

1. விவசாயத் தொழிலாளர்கள்
2. தோல் பதப்படுத்துவார்கள்
3. சுத்தம் செய்பவர்கள்
4. கிராம காவலாளிகள்
5. கிராம கைவினைஞர்கள்

அதிகாரமிக்க பிராமணர் அல்லாத உயர் வகுப்பு இனத்தினர் பிராமணர்களோடு சேர்ந்துகொண்டு தீண்டத்தகாத வகுப்பினர்களுக்கு இட ஒதுக்கீட்டின் பலன்கள் சேரக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். இதனை அறிந்த ஆங்கிலேய அரசாங்கம் தாழ்த்தப்பட்டோர் பட்டியல் ஒன்றை தயார் செய்தது. அதனை வெளிச்சாதியினர் (exterior caste) என்று அழைத்தனர். அதில் எங்களை சேர்த்திருந்தனர். பட்டியல் இனத்தவருக்கான பிரிவை ஏற்படுத்தும் வரையில் மருத்துவர் இனம் அதில்தான் இடம்பெற்றிருந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (depressed class) என்பது பட்டியல் இன மற்றும் பிற்பட்ட வகுப்புக்களை சேர்ந்த ஒரு பெரும் தொகுப்பை அடக்கியது. (Mandal Page -19) (இணைப்பு 1)

தென்னிந்திய மருத்துவ சங்கத்தின் தலைவர் எங்களது இனத்தை பட்டியல் இனத்தில் சேர்க்கும்படி சென்னை மாகாண ஆட்சியருக்கு கோரிக்கை வைத்தார். ஆட்சியரும் மருத்துவர்கள் எவ்வாறு உயர் வகுப்பு இனத்தினருக்கு முடி வெட்டி, சவரம் செய்து அவர்கள் குடும்பத்தில் நிகழும் குழந்தை பிறப்பு, பூப்பெய்தல், இறப்பு சடங்குகளுக்கு சேவை செய்து அவர்களுடைய ஈகையில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டி பரிந்துரை செய்துள்ளார். ஆனால் பிரிட்டிஷ் அரசு பட்டியல் இன வகுப்புக்களை குறைக்கும் நிர்பந்தத்தினால் அந்த கோரிக்கையை ஏற்கவில்லை. (The Depressed Class of India, G.A. Nadanam, New Delhi 1967 - page 42)

மருத்துவர் இனத்தை பட்டியல் வகுப்பிலிருந்து நீக்கியது, ஆங்கில அரசு செய்த ஒரு வரலாற்றுப்பிழையாகும். உண்மை என்னவென்றால் மருத்துவர் இனம் ஒரு சமுதாயத்திற்கு சேவை செய்தால், மற்றொரு சமுதாயத்திற்கு சேவை செய்ய முடியாது. சமீபத்தில் கேரளாவில் வட்டவாடா பஞ்சாயத்தில் சக்கிலியர்களுக்கு சேவை செய்தது, சாதி வண்கொடுமைக்கு வித்திட்டது. (Times News Network, September 5, 2020) மேலும் விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி தாலுக்காவில், பஞ்சவர்ணம் என்னும் மருத்துவர் கீழ் சாதியினருக்கு முடி வெட்டியதால் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டார். (Dinakaraan 29.09.2020). நாங்கள் எந்த வகுப்பினருக்கு சேவை செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு மேல் சாதியினர் கையில்தான் இன்னும் உள்ளது. ஆதலால், தீண்டாமை என்பது இனத்துக்கு இனம் கடை பிடிக்கும் ஒரு தொடர்பேயாகும்.

நேரு, ஆட்சியமைப்பு சட்டத்தில் முதல் திருத்தத்தை கொண்டுவந்தார். தாழ்த்தப்பட்ட வகுப்பினரை முன்னேறிய வகுப்பினரின் அளவிற்கு உயர்த்துவதே சமத்துவம் என்று பிரகடனம் செய்தார். சமூக மற்றும் கல்வியில் முன்னேற்றமடையாதவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்பதை கண்டறிந்தார்.
ஆகவே காக்க காலேல்கர் தலைமையில் இந்திய முதல் பிற்பட்டோருக்கான ஆணையத்தை அமைத்து பிற்பட்ட இனத்தினர்கள் யாவர் என்று தேர்ந்தெடுத்து அவர்களது இன்னல்களை களைய விரும்பினார். காலேல்கர் 2399 சாதியினர் சமூக கல்வியில் பின் தங்கியுள்ளனர், (SEBC) என்றும் அதில் 837 வகுப்பினர் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களாகவும், கண்டறிந்தார். அதிக நலன் பெற்ற சில இனங்களையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து நீக்கவும் அறிவுறுத்தினார்.”எல்லா இனத்தினையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்த்தால் உண்மையில் உதவி தேவையுள்ள வகுப்பினரின் ஒரு சிலரே பெறுவர்.

இட ஒதுக்கீடு பலன்கள் உடனடியாக தேவைப்படுவோர்களுக்கு கிடைக்காமல் போய்விடும். இந்த ஒதுக்கு முறை ஆட்சியமைப்பு சட்டம் 340க்கு சீர்கேடாக அமையும்'' என்று காலேல்கர் கூறினார். இப்படிப்பட்ட சூழ்நிலையில், மருத்துவர் இனம் எந்த ஒரு இட ஒதுக்கீட்டுப் பலனையும் பெறவில்லை.

1956, பட்டியில் இன சட்டம் (SC/ST) காமராஜ் அவர்களால் இயற்றப்பட்டு, அவர்களுக்கு கல்வி வேலை வாய்ப்புகளில் சலுகைகள் அறிவிக்கப்பட்டது. வேலை வாய்ப்புகளில் வயது வரம்பு நீடிக்கப்பட்டது. வேலை வாய்ப்பு நேர்காணலுக்கு சென்றுவர படிப்பணம் வழங்கப்பட்டது. முக்கியமாக, பட்டியல் பிரிவில் எந்தெந்த ஜாதியினர் சேர்க்கப்பட வேண்டும் என்பதை இறுதி செய்யப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பிலுள்ள எந்த ஜாதியினையும் பட்டியிலனத்தில் சேர்க்கக்கூடாது என்றும் உறுதி செய்யப்பட்டது. வண்ணார் பேரவை தலைவர் தங்கள் இனத்தை பட்டியலினத்தில் சேர்க்க வேண்டும் என்று கோரினார். "அவ்வாறாக சேர்க்க முடியாமல் போனாலும் அவர்களது கோரிக்கைகளில் நியாயம் இல்லாமல் இல்லை'' என்று உணர்ந்தார். கல்வித்துறையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் 39 மிகவும் பின் தங்கிய இனத்தினை அறிந்து (G.O. Ms. No.353 dated 31st June 1957) அவர்களுக்கு 92 MER என்ற முழு கல்விச்சலுகையை அறிவித்தார். இது ஒரு வணக்கத்திற்குரிய பலனை கொடுத்தது. எங்கள் இனத்தினரின் சில சிறுவர்கள் முதல் முறையாக கல்விசாலை வாயில்களை நுழைந்தனர்.

1969-ல் D M K அரசு A.N. சட்டநாதன் குழுவினை அமைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க நீக்க வேண்டிய இனங்களை கண்டறிய கட்டளையிட்டது. மேலும் இச்சமயத்தில் சலுகைகள் பெற்ற இனங்களும் தங்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க முறையிட்டனர். சட்டநாதன் அவர்கள் சமூக கல்வியில் பிற்போக்கு நிலையோடு சில இனத்தினர்களின்

குலத்தொழிலையும் அளவுகோலாக எடுத்துக்கொண்டார். 1964லிருந்து 1968 வரை 11.3% மக்கள் தொகையுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 86.1% ஒதுக்கீட்டு பலன்களை பெற்றனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பில் 76% மக்கள் தொகை கொண்ட 156 இனத்தினர் 13.6 % பலன்களை மட்டுமே பெற்றனர்.

1. வடுகர்
2. துளுவ வெள்ளாலார்
3. அகமுடையார்
4. கவரா
5. வீரக்கொடி வெள்ளாலர்
6. சௌராஷ்ட்ரா
7. சாது செட்டி
8. கைகோளர் (செங்குந்த முதலியார் (சோழிய வெள்ளாலர்)
9. தேவங்கர்

போன்ற இனத்தினர் தங்கள் மக்கள் தொகைக்கு மீறியப்பலன்களை பெற்றுள்ளனர்.

1. மருத்துவர்
2. வண்ணார்
3. மீனவர்
4. ஒட்டர்
5. வளையர்
6. அம்பலக்காரர்
7. குறும்பர்

போன்ற இனத்தினரை பிரித்து மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்த்து, தனிப்பிரிவாக பாவிக்க அறிவுறுத்தினார்கள். சமூக, பொருளாதார, கல்வி பிற்போக்கு பட்டியல் இனத்தைத்தவிர வேறு எந்த வகுப்பிலும் இல்லை என்பது இந்தியாவின் நிலையை புரியாமையை உணர்த்துகிறது’’. ஆதலால் பிற்பட்ட

வகுப்பிற்கு 17% மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பிற்கு 16%சேர்த்து பிற்பட்ட வகுப்புகளுக்கான சதவிகிதத்தை 25%லிருந்து 33% ஆக உயர்த்தினார்.

அரசு அதற்கு பதிலாக அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சேர்த்து இடஒதுக்கீட்டினை 25%லிருந்து 31% ஆக உயர்த்தியது. மேலும் வெள்ளால கௌண்டர், சோழிய வெள்ளாலர், கொங்கு வெள்ளாலர், முதலியவர்களையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்த்தது. ஆக பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்ட இனத்தின் மொத்த மக்கள் தொகை 53.5%லிருந்து 62% உயர்ந்தது. ஆனால் இட ஒதுக்கீட்டின் சதவிகிதம் அதில் பாதியாகவே அமைந்தது. (இணைப்பு 2)

AIADMK அரசு மேலும் சில ஜாதியினரை சேர்த்து பிற்படுத்தப்பட்ட வகுப்புக்களின் இடஒதுக்கீட்ட சதவிகிதத்தை 50% உயர்த்தியது. கீழ்கொடுக்கப்பட்ட அட்டவணை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் இடம் பெற்ற இனத்தின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் எவ்வாறு கூட்டியது என்பதை விவரிக்கும்.

1895= 039

1913= 110

1920= 128

1950= 152

1977= 180

1987= 202

1989-ல் DMK அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினை, பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு என்று பிரித்து, 140 இனத்தினை பிற்படுத்தப்பட்ட வகுப்பிலும், மிகவும் பின்தங்கியவர்களையும், சீர்திருத்த மரபினர்களையும் மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்த்து 20% இட ஒதுக்கீடு வழங்கியது. மிகவும் பின் தங்கிய வகுப்பில் பெரும் மக்கள் தொகை கொண்ட வன்னியர் இனத்தினை சேர்த்தது. இட ஒதுக்கீட்டு பலன்களை மருத்துவர்

இனம் பறிகொடுத்தது. இதனை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள மருத்துவ படிப்பில் / அரசு வேலைவாய்ப்பில் இடம் பெற்ற இனத்தின் எண்ணிக்கையில் அறிந்துகொள்ளலாம். (இணைப்பு 3.1 to 3.3 மருத்துவ படிப்பு, அரசு வேலைவாய்ப்பு - நவசமாஜ் RTI மூலமாக பெற்ற தகவல்கள்)

1978வரை மத்திய அரசு பிற்படுத்தப்பட்டவர்களுக்கான சமூக கல்வி வளர்ச்சியில் அக்கறை கொள்ளவில்லை. மூவாயிரம் வருடங்களாக கடைபிடிக்கப்பட்ட சாதிய அரசியலே சமூக அநீதிக்கு காரணமென உறுதியாக மண்டல் கூறினார். நமது சமத்துவ சமூதாயம் அமைய சாதி ஒரு முட்டுக்கட்டையாக உள்ளது என்றார். நாட்டு மக்கள் தொகையில் 52 சதவிகிதம் கல்வி சமூக பொருளாதார வாழ்க்கையில் பின் தங்கியுள்ளனர். அவர்கள் மத்திய அரசின் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு பரிந்துரை செய்தார்.

மண்டல் பரிந்துரை 3743 பிற்பட்ட இனத்தினரின் வாழ்க்கை பாதையில் ஒரு மைல்கல்லானது. ஆனால் இதன் பலன்களை மக்கள் தொகை அதிகம் கொண்ட பிற்பட்ட இனத்திற்கே கிடைத்தது. பத்து சதவிகித மக்கள் தொகை கொண்ட இனத்தினர் 60% இட ஒருக்கீட்டு பலனை பெறுகின்றனர். 2011ல் நடைபெற்ற சமூக பொருளாதார மற்றும் கல்வி கணக்கெடுப்பில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு இனத்தினரின் எண்ணிக்கை 5013ஐ கடந்தது. ஆதலால் 2017ல் பிரதமர் மோடி நீதிபதி ரோகிணி தலையில் ஒரு குழுவை அமைத்து இட ஒதுக்கீடு பலன் எல்லா இனத்திற்கும் சேறுமாறு உட்பிரிவை ஏற்படுத்த கூறினார். அதுபோலவே தமிழ்நாடு அரசும் மாநில பிற்பட்ட ஆணையத்தினை (அரசாணை எண்.52 நாள் 08.07.2020ன்படி) அமைத்து மிகவும் பிற்பட்ட வகுப்பில் உள்ள இனத்தினருக்கு உள் ஒதுக்கீடு செய்ய பணித்துள்ளது.

தமிழ் இனம் தொன்மை வாய்ந்தது. அவர்களின் நாகரீகம் உலகத்தில் சிறந்தது. அவர்களது இலக்கியம், போர்முறை, கட்டிடக்கலை, குடும்ப வாழ்வு,

நீதி பரிபாலனம், கடற் பயணம், வர்த்தகம், வேளாண்மை, விழாக்கள், மொழி போன்றவற்றிலிருந்து அறியலாம். தொழிலாலோ பிறப்பாலோ அவர்கள் பிரிக்கப்படவில்லை. ஆரியர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் ஆக்கிரமிப்பில் தமிழர்களின் வாழ்வு என்ற தங்க சேலை கிழிக்கப்பட்டுவிட்டது. ஆரியர்களால் சமூதாயமும் கலாச்சாரமும் மற்றும் ஆங்கிலேயர்களால் மற்ற மக்கள் நலம் சார்ந்த சமூதாய அமைப்பும் சீரழிக்கப்பட்டு விட்டன. சுருக்கமாக சொன்னால் தமிழர்கள் பிரிந்து வீழ்ந்தனர். மக்களின் தொழிலுக்கு ஏற்ப ஆரியர்கள் தமிழர்களை நான்கு வருணங்களாகவும், மேலும் வருணங்களை சாதிகளாகவும் பிரித்தனர். அவர்களின் தொழிலின் தூய்மையைக்கருதி மக்களை பிரிமிட் போன்ற அமைப்பில் பிராமணர்களை மேல் தட்டிலும் மற்றவர்களை கீழ் தட்டிலும் அடுக்கினர். இந்த மனுஸ்மிரிதியை கடை பிடிப்பதை உறுதி செய்ய பிராமணர்கள் சமுதாயத்தின் அதிகார தலைமையை ஏற்றனர். ஆங்கிலேயர்கள் உள்நாட்டு மதப்பிரச்சினைகளில் தலையிடக்கூடாது என்ற கொள்கையை எடுத்ததன் விளைவாக இந்த சாதி அமைப்பு உறுதி செய்யப்பட்டுவிட்டது. வெவ்வேறு இனங்களும் கலாச்சாரம் கொண்ட நிலங்களும் மக்களும் ஒன்றிணைக்கப்பட்டு, இந்துக்கள், இந்தியா என்று பெயர் சூட்டப்பட்டுவிட்டது.

மருத்துவ இனத்தைச் சேர்ந்த நாங்கள் ஒரு காலத்தில் அரசர்களாகவும் தளபதிகளாகவும், கவிஞர்களாகவும், மருத்துவர்களாகவும், பண்டிதர்களாகவும், ஞானிகளாகவும் வாழ்ந்தோம். எங்களது புகழ் நீக்கப்பட்டு, மேல்சாதி மக்களில் பணியாளர்களாக நாங்கள் சிறுமை படுத்தப்பட்டோம். இன்னும் கிராமங்களில் அடிமையாகவும் கீழினங்களாகவும் கருதப்படுகிறோம். இந்திய அரசியலமைப்பு உறுதி செய்யப்பட்ட சமத்தும், சகோதரத்துவம், சுதந்திரம் எங்களது எட்டாக் கனியாகவே உள்ளது. பல தலைமுறைகளாக கடைபிடிக்கப்படும் இந்த சாதி வெறுப்பு எல்லோர் உணர்விலும் உறைந்துவிட்டதனால், இன்றும் நாங்கள் அருவருக்கத்தக்க இனமாகவே கருதப்படுகிறோம். நாங்கள் இன வேறுபாட்டில் பட்டியல் இன மக்களை விட மேல் நிலையில் இல்லை. இறந்தவர்களை அடக்கம் செய்யும் சடங்குகளில், நாங்களும் பட்டியல் இனத்தாரோடு ஒன்றாகவே சேர்ந்து

மேல்சாதியினருக்கு பணி செய்கிறோம். பட்டியல் இனத்தாருக்கு PCR Act 1955 பாதுகாவலாக உள்ளது. எங்களுக்கு அதுவும் இல்லை. சாதி வன்கொடுமைகளை வெளியே சொல்லக்கூட முடியவில்லை. மேல் சாதியினரால் குரல்வளை நெறுக்கப்படுகிறோம்.

1. 08.05.2020ல் அரியலூர் மாவட்டத்தில் திருமானூர் கிராமத்தில் கற்பககுமாரின் இறந்த உடலை எரியூட்டல் செய்யவிடாமல் மேல் சாதியினர் தடுத்து தேசிய மனித உரிமை கழகத்தில் 5112/22/42 - 2020 டைரியில் குறிப்பேற்றப்பட்டது.

2. பேராவூரணியைச் சேர்ந்த 42 வயது பெரியசாமியை இறந்த பிணத்திற்கு சவரம் செய்யவில்லை என்று மேல் சாதியினர் வண்முறை செய்தனர்.

3. தர்மபுரி மாவட்டத்தில், பிக்கம்பட்டி கிராமத்தில் சாதி மாறி திருமணம் செய்ததற்காக, எங்கள் இன ஆண்கள் மற்றும் பெண்களை நிர்வணப்படுத்தி அனைவரையும் மரத்தில் கட்டிவைத்து அடித்தனர். இது தேசிய மனித உரிமை கழகத்தில் வழக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. (Ref.130148/CR/2019).

4. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், ஊரங்கணி கிராமத்தில் தன் தகப்பனார்போல் கிராமத்தில் வீட்டுக்கு வீடு சென்று சவரம் செய்ய முடியாது என்றதனால், குடும்பத்தோடு கிராமத்தைவிட்டு துரத்தப்பட்டார் என்பது தேசிய மனித உரிமை கழகத்தில் வழக்காக பதிவு செய்யப்பட்டது.(Ref.No.3363CR2020)

5. 22.09.2020ல் விருது நகரில் முனுசாமி என்பவர் சாதிக்கு மீறிய செல்வாக்கும் செல்வமும் பெற்றமையால் பொறாமையில் கொலை செய்யப்பட்டார்.

6. திண்டுக்கல் மாவட்டம், சிறுமி கலைவாணி கற்பழிக்கப்படு கொலை செய்யப்பட்டார். போதிய சாட்சிகள் இல்லை என்று குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதில் முறையான நீதி கிடைக்கவில்லை என மாநில அளவில் எங்கள் இனம் போராட்டத்தை நடத்தியது.

இதுபோல ஆயிரக்கணக்கான சாதி வண்கொடுமைகள் நடைபெறுகின்றன. மேல் சாதியினாரின் வன்முறைக்கு மறுபடியும் ஆட்படுவோம் என்ற அச்சத்தில் அத்தகைய கொடுரங்கள் வெளியே சொல்ல முடிவதில்லை.

“ இந்து இந்தியா கட்டமைப்பில் சாதி கற்களாகும். சாதிகள் இந்து சமுதாயத்தை மேலிருந்து கீழாக அடுக்கு முறையில் கட்டப்பட்டுள்ளது. ஒருவனின் சமூக பொருளாதார கல்வி நிலைக்கும், அவனின் சாதி அடிப்படையான அந்தஸ்துக்கும் ஒரு தொடர்பு உள்ளது.” - மண்டல் P 75.

ஆதலால் நாங்கள், தாழ்த்தப்பட்டோர், வெளி சாதியினர், மிகவும் கடுமையாக பின் தங்கியவர்கள், மந்த நிலையர்கள், (sluggards) என்று சட்டநாதன், அம்பாசங்கர், காலேல்கர், மண்டல் குழுக்களால் வர்ணிக்கப்பட்டோம். ஆங்கிலேய அரசு கால மக்கள் தொகை கணக்கெடுப்பிலும் நாங்கள் இவ்வாறாகவே கருதப்பட்டோம். எங்கள் சாதியும் எங்கள் தொழிலும் எங்களுடைய பின்தங்கிய நிலைக்கு காரணம். எங்களை OBC மற்றும் MBC வகுப்புக்களில் உட்பிரிவு அல்லது உள் ஒதுக்கீடு செய்வதற்கு சாதியை மட்டிலுமே ஒரே காரணியாக கொள்ள வேண்டும். இட ஒதுக்கீட்டை சாதியின் அடிப்படையில் ஏற்பது, சமுதாயத்தை பிளவு படுத்துவதாக இருப்பினும் இதனை விட அறிவுபூர்வமான வழி இல்லை என்று காலேல்கர் கூறுகிறார்.

> “முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்பது போல சாதியினால் விளைந்த தீமையை சாதி சார்ந்த நடவடிக்கைகளால் மட்டுமே தீர்க்க முடியும்” - மண்டல் P-75.

முடிவாக எங்கள் மருத்துவ சமுதாயம் பிரிட்டிஷ் காலத்தில் பட்டியல் இன மக்களோடு சேர்ந்திருந்தபோதும் பின்னர் முற்போக்கான சாதிகள் அடங்கிய பிற்பட்ட வகுப்புகளில் சேர்த்தபோதும், மிகவும் பின் தங்கிய வகுப்பில் உள்ள ஒத்த நிலை இல்லாத சாதிகளோடு சேர்த்தபோதும், நாங்கள் பிற்பட்ட வகுப்புக்களுக்கான ஆணையங்கள் பரிந்துரைத்த எந்த பலன்களையும்

பெறவில்லை. இந்திய சுதந்திரத்திற்கு பிறகு 70 ஆண்டுகள் ஆயினும் நாங்கள் உயர் கல்வி நிலையங்களான IIT அல்லது AIIMS, IAS அல்லது IPS போன்ற தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களோ, உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகளோ எங்கள் இனத்தில் சேர்ந்தவர்கள் கிடையாது. இணைப்பு 4.1 to 4.3 (நவசமாஜ் RTI மூலமாக பெற்ற தகவல்கள்). அதுபோலவே, சட்ட சபை, பாராளுமன்றம், உள்ளாட்சி அமைப்புகள் போன்ற எதிலும் எங்களுக்கு பிரதிநிதிகளும் இல்லை, பிரதிநிதித்துவமும் இல்லை. எங்களை பரம்பரை தொழிலாக கருதப்படும் முடிவெட்டிதலோடு சேர்த்தே எங்களை பார்ப்பதால் நாங்கள் சமுதாய மையத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளோம். நாங்கள் சமுதாயத்தில் முன்னேற்ற பாதையில் செல்ல அரசு வழிவகைகளை காணாவிடில் இந்து மதத்தில் நாங்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற முத்திரையை அழிக்க முடியாது. எங்களுடைய இழிநிலையும் தொடர்ந்து நாங்கள் பெறும் துன்பங்களையும் களைய அரசும் பிற்படுத்தப்பட்ட நலன் காக்கும் குழுக்களும் உதவி புரிய வேண்டும். நாங்கள் இதுகாரும் இழந்த வாய்ப்புகளையும் கருத்திற்கொண்டு எங்கள் வாழ்வு மீட்பு பெற எங்கள் வாழ்வில், சுயமரியாதை மற்றும் கவுரவம் பெற, பிற்பட்ட நல குழுக்களும் அரசும் எங்களுக்கு வேண்டிய கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை பெற்றுத்தர வேண்டும். இந்த விஷயத்தில் அரசும், பிற்பட்ட ஆணையங்களும் எங்களின் கோரிக்கையின் நியாயத்தை அறிந்து, கருணை உணர்வோடு மிகவும் பின் தங்கிய வகுப்பில் (MBC) எங்களுக்கு 5% உள் ஒதுக்கீடாக அளிக்க வேண்டும் என்று வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

நாள்: 14.12.2020 தமிழக அனைத்து மருத்துவ இன அமைப்புகள்

## CASE STUDY OF MANNARGUDI

We like to present an analysis of the life of the people of Maruthuvar people in Mannargudi, from “Special Reports on Selected Towns [Mannargudi]” prepared by the Directorate of Census Operations Tamil Nadu, 1979.

Mannargudi could be taken as a norm for arriving at a nearly broad idea of our life. Mannargudi, comprising an area of 11.63 sq. km., was a class III Town in 1979 and elevated to class II in 1981 with a population 51,738 people, of which 26,491 were males and 25,247 were females. The study was based on a sample survey of 200 families. The town was mostly rural and a little urban, like Tamil Nadu which is made old 75% of villages and 25% of cities and towns. Similar to all villages, towns and cities ( before the spread of human settlements and business at the adjoining areas) the temple at its centre was surrounded by Brahmins, the next layer by Pillais, Chettiars, and Mudaliars and the remaining layers with people of other castes according to the esteem of their castes. At the outskirt, the people of the Scheduled Caste and Tribes lived. The demographic mapping has altered after many years. Yet the trajectories of caste discrimination have not disappeared altogether. The service class is always scattered at the extreme periphery. The report describes the distribution of the households, thus:

The residential pattern in the olden days was governed by the hierarchal caste system. As such the priestly caste of Brahmins had their settlement around the temple surrounded by other castes in the hierarchal order. The following streets around the temple viz. Gopalasamudram West Street, Gopalasamudram North Street, Haridhranathi West Street etc have the Brahmins prominent in numbers. The Chettiars of the business community have their settlements along the shopping and marketing centre facing the main roads—Melaraja Veedhi, Big Bazaar, and Gandhi Road.(p.3)

The Scheduled caste people lived on Annamalainatha Harijan Street and Poongothai Road Harijan Street. The Muslims lived around the Mosque and the Christians, the Church. The settlement of the people followed strictly the varnashrama system of the Aryans at the inner zone, the Vysyas and the Kshatriyas at the middle zone and the Shudras at the outer zone. The maruthuvar people lived largely on the Yesham Street, at the periphery. Similarly their residential places (excluding the extension of the town) the pucca brick houses, bungalows and the thatched houses bespoke the dignity of their socio-economic status. The religious population of the people of Mannargudi, is as any medium sized city now:

Hindus-89.78%

Muslims-6.24%

Christians-3.53%

Jains-0.34%

Sikhs-0.01%

Other religions-0.1%

Agriculture was a major occupation of the people. The lands were owned by the people of a few castes which were mostly their traditional properties. The farm laborers were the people of the Scheduled Castes who formed 6.93% of the Hindu population. The second most important occupation was weaving. It was not considered a hereditary occupation of the Mudaliars. There was a lot of profit in it. So many people of the following castes shared the business:

Sowrashtra Brahmins

Devanga

Chettiars

Senguntha Mudaliars

Kaikkolars

Padma Saliars

Padaachis

Palliars

Naidus

Kallars

Muslims

The Muslims were exclusively involved in Pith work and Basket making. The Maruthuvar people were called as Marithivars and Navithars, distinguishing their work as physicians and barbers. Some people were able to continue the Siddha practice in spite of the rise of Allopathic studies and practice. The poor people in the villages around the town could afford to pay only the Maruthuvars, not the Allopathic doctors. The Navithars are the hair-dressers. There were growing symptoms of the people of different castes living on the same street and doing the same business. The heterogeneity was acceptable for every occupation except hairdressing. It was considered an undignified occupation meant only for people born in Maruthuvar caste. The following Table 1.1, 1.2 and 1.3will reveal the details of the people of Mannargudi, with reference to their castes, age, occupation, etc:

*(Reference 1to 3)*

The following Table will reveal the people and their castes who command respectability in Mannargudi. The Maruthuvar community was conspicuous by its absence: *(Reference 4 Table 2)*

The following Table will show how the Maruthuvar caste had no role in the Rajagopalasamy Temple. We were denied of any service to the God in terms of special pooja or in the processions and Alankaram in the ten days of the Temple festival. Every community was given the honor of conducting the function, including the Vannan and the Scheduled caste people. It confirmed the fact that the temple traditions based on the Sathurveda considered the Maruthuvar Community as the most untouchable. *(Reference 5-Table 3)*

The rest of the Tables will showcase the socio-educational and economic backwardness of the Maruthuvar Community. It is self-explanatory that the

community has been relegated to the last rung of the caste ladder and owing to its thin population, it is denied of any political consideration:

*(Reference 6 Table 4.1 to 4.3, Reference 7 to 9)*

In conclusion, we state that this Maruthuvar Community-- which the British found to be no better than some of the castes in the Scheduled Castes, bound with the advanced backward castes and at last with the MBC, a hetrogeneous group-- has not at all been benefitted by any Backward Commission. Our socio- educational and economic backwardness is less than the state average. Even after 70 years of independence none of us could be selected to the top educational institutions like IIT or AIIMS, or selected to serve as IAS or IPS officers, or appointed as judges in the High Court or the Supreme Court. Neither could we claim any representation in Corporation, Assembly or Parliamentary elections. We are ignored and marginalized owing to the reason that we are identified by our hereditory occupation of hair-dressing. It has been a tatoo of untouchability in the caste based Hindu society which we believe could not be erased unless the government takes adequate measures to facilitate our upward movement in the society. We request that the commission/government shall consider sympathetically how we have been deprived of all benefits of reservation and led to a prolonged period of subjucation by the imperial forces for the last 70 years and more. As a measure of recompensation for our loss and distress,and as a sort of reclamation of dignity of life, we request that the commission/government shall suitably make secure that we receive the intended educational and employment opportunities. In this regard, we earnestly hope that the commission/government will consider favourably our request and grant Maruthuvar caste 5% as inclusive reservation within the quota of the Most Backward Class.

*****